| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர்.சி.உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள். |

ந.க.எண். **020389**/எச்.1/2019 நாள் : 29.08.2020

ஐயா / அம்மையீர்,

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுகள், செப்டம்பர் 2020 – தனித்தேர்வர்களது விண்ணப்பங்களை ஆய்வு செய்தல் – சேவை மையங்களிலிருந்து பெறப்பட்ட தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்லைன் கட்டணத்தினை அரசுக் கணக்கில் செலுத்தக் கோருதல் – சார்பு.

-----

மார்ச் 2020 மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்காத தனித்தேர்வர்கள் மட்டும் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Government Examination Service Centres) நேரில் சென்றும், மார்ச் 2020 மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பள்ளி மாணவர்கள் அவர்தாம் பயின்ற பள்ளியிலும் / தனித்தேர்வர்கள் அவர்தாம் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வாயிலாகவும் ஆன்–லைனில் 24.08.2020 முதல் 29.08.2020 (தட்கல் உட்பட) வரையிலான நாட்களில் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தேர்வர்கள் விண்ணப்பங்களை பதிவு செய்யும் நாட்கள் | **24.08.2020** முதல் **27.08.2020** வரை |
| சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) விண்ணப்பங்களை பதிவு செய்யும் நாட்கள் | **28.08.2020** முதல் **29.08.2020** வரை |
| சேவை மையங்களில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்களுக்கான கட்டணத் தொகையினை சேவை மையத்தினர் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள் | **31.08.2020** |
| பள்ளிகள் / தேர்வு மையமாக செயல்படும் பள்ளிகள், விண்ணப்பங்கள் தொடர்பான விவரம் (Summary report) மற்றும் தேர்வுக் கட்டணத் தொகையினை ஆன் – லைனில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டினை சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள் | **02.09.2020** |

...2...

பள்ளிகள் / தேர்வு மையமாக செயல்படும் பள்ளிகளிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் தொடர்பான விவரம் (Summary report) மற்றும் தேர்வுக் கட்டணத் தொகையினை ஆன் – லைனில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டினை உதவி இயக்குநர்கள் சரிபார்த்து பெற்றுக் கொண்டு, அவற்றை தங்கள் வசம் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவேண்டும்.

இணையதளம் வாயிலாக கட்டணத்தினை செலுத்த இயலாத பள்ளிகளிலிருந்து பெறப்படும் கேட்பு வரைவோலைகளின் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தபின்பு, கேட்பு வரைவோலைகளை கட்டண விவரங்களுடன் சேர்த்து 07.09.2020–க்குள் இவ்வலுவலக துணை இயக்குநர் (பொது) (பொ) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவேண்டும்.

<u>சேவை மையங்களில் இருந்து பெறப்படும் தனித்தேர்வர்கள் விண்ணப்பங்கள் மற்றும் தட்கல் விண்ணப்பங்களை ஆய்வு செய்தல்</u>

மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு துணைத் தேர்விற்கு தனித்தேர்வராக விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் குறித்த விவரம் மற்றும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள் குறித்த விவரம் பட்டியல்களாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் 31.08.2020 அன்று சேவை மையங்களிலிருந்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பங்களை முழுமையாக ஆய்வு செய்து, விண்ணப்பதாரர்கள் மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுத முழுத்தகுதி பெற்றுள்ளனரா என்பதை உறுதி செய்யுமாறும், விண்ணப்ப இணைப்புகள் முழுமையாக உள்ளனவா என்பதை சரிபார்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், முதன்முதலாக +1 தேர்வெழுத அசல் மதிப்பெண் சான்றிதழுடன் விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் மற்றும் +1 தேர்வு மட்டும் எழுதி இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட மதிப்பெண் பட்டியலுடன் +1 Arrear மற்றும் +2 தேர்வெழுத விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் தவிர மற்ற வகை தனித்தேர்வர்களது மதிப்பெண் சான்றிதழ்களின் நகல்களில் அத்தேர்வர்கள் பயின்ற பள்ளியின் தலைமையாசிரியர் அல்லது ஏதேனும் ஒரு அரசு பள்ளியின் தலைமையாசிரியரிடம் சான்றொப்பமிட்டதாக இருக்க வேண்டும். அவ்வாறு சான்றொப்பமிடாத மதிப்பெண் சான்றிதழ்கள் இணைக்கப்பட்ட தனித்தேர்வர்களது விண்ணப்பம் கண்டிப்பாக நிராகரிக்கப்பட வேண்டும்.

தகுதியில்லாத தேர்வர்கள் விண்ணப்பித்திருப்பின், அத்தகைய விண்ணப்பங்களின் விவரத்தினை கீழ்க்காணும் படிவத்தில் உள்ளவாறு மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்விற்கும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்விற்கும் தனித்தனி பட்டியல்களாக தயாரித்து, அவற்றை **03.09.2020** அன்று அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர் (மேல்நிலை) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| S. No. | Name | Date of Birth | Application No. | Remarks |
|---|---|---|---|---|
| | | | | |

**<u>சேவை மையங்களிலிருந்து பெறப்படும் தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்லைன் கட்டணத்தினை அரசுக் கணக்கில் செலுத்துதல்</u>**

சேவை மையங்களிலிருந்து (Nodal Centres) பெறப்பட்ட மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் எழுதவுள்ள தனித்தேர்வர்களிடம் பெறப்பட்ட கட்டணத் தொகை மற்றும் சேவை மையத்தில் தேர்வர் ஒருவருக்கு ரூ.50/– வீதம் பெறப்பட்ட ஆன்லைன்கட்டணத் தொகைகளை அந்தந்த மாவட்டங்களிலேயே அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரே கீழ்க்காண் வழிமுறைகளை பின்பற்றி அரசுக் கணக்கில் செலுத்தவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. சேவை மையங்களிலிருந்து பெறப்பட்ட Summary Report-ன் அடிப்படையில் தனித்தேர்வர்களின் எண்ணிக்கைக்கு உரிய கட்டணத் தொகை அனைத்தும் பெறப்பட்டுள்ளதா என சரிபார்த்திட வேண்டும்.

2. Summary Report-ல் HSE FIRST YEAR - DIRECT PRIVATE (NPNS) வகை தேர்வர்கள் செலுத்திய தேர்வுக்கட்டணம் மற்றும் ஆன்–லைன் கட்டணத்தினை மட்டும் +1 தேர்வுக்கான கட்டணத் தொகையாக கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். மீதமுள்ள வகை மேல்நிலை தேர்வர்கள் செலுத்திய தேர்வுக்கட்டணம் மற்றும் ஆன்–லைன் கட்டணத்தினை +2 தேர்வுக்கான கட்டணத் தொகையாக கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

3. அதன்பின், சேவை மையங்கள் மூலம் பெறப்பட்ட மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு தேர்வுகளுக்கான **ஆன்லைன் விண்ணப்பத்திற்கான சேவைக் கட்டணத்தினை (Total No. of Candidates Applied for both First Year and Second Year Exams X 50) ஒரே செலுத்துச்சீட்டின் மூலம்** கீழ்க்காண் கணக்குத் தலைப்பில் அரசுக் கணக்கில் செலுத்த வேண்டும்.

| | New | Old |
|---|---|---|
| சேவைக் கட்டணம் | 0202 01 102 AA 22799 | 0202 01 102 AA 2799 |

4. மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு தேர்வுகளுக்கான **தேர்வுக் கட்டணத் தொகையினை** (ஆன்–லைன் சேவைக் கட்டணம் தவிர்த்து) தேர்வுக்கட்டணம், மதிப்பெண் சான்றிதழ் கட்டணம், சேவைக்கட்டணம் எனத் **தனித்தனியாக** வகைப்படுத்தி கீழ்க்காண் கணக்கு தலைப்புகளில் செலுத்துச் சீட்டுகள் மூலம் அரசுக் கணக்கில் செலுத்திட வேண்டும்.

0202 Education sports, Arts and Culture
01 General Education
102 Secondary Education
AA Examination conducted by Directorate of Government Examination

| | New | Old |
|---|---|---|
| Examination Fees | 0202 01 102 AA 22713 | 0202 01 102 AA 2713 |
| Certificate Fees | 0202 01 102 AA 22708 | 0202 01 102 AA 2785 |
| Service Charge | 0202 01 102 AA 22799 | 0202 01 102 AA 2799 |

<u>தேர்வுக் கட்டணத் தொகையினை பிரிக்கும் முறை</u>

<u>முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக் கட்டணம்</u>

Certificate Fees = No.of Direct Private Candidates Applied for First Year Exam X Rs.20

Service Charges = No.of Direct Private Candidates Applied for First Year Exam X Rs.5

Exam Fees = Total Exam Fees for First Year Exam - (Certificate Fees மற்றும் Service Charges நீங்கலாக)

**மேற்காண் முறைப்படியே, மீதமுள்ள வகைத் தேர்வர்கள் செலுத்திய தேர்வுக் கட்டணத் தொகையின் கூடுதலை மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்விற்கு பிரித்திட வேண்டும்.**

சிறப்பு அனுமதித் (Tatkal) திட்டத்திற்கான கட்டணத் தொகையினை (ரூ.1,000/–) தேர்வுக்கட்டணத்துடன் (Exam Fees) சேர்த்து அரசுக் கணக்குத் தலைப்பில் செலுத்திட வேண்டும்.

இவ்வாறு மேற்காண் தொகையினை அரசு கணக்கில் செலுத்தியதற்கான அசல் செலுத்துச்சீட்டுகள் ( i. மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வு கட்டணம், ii. இரண்டாம் ஆண்டு தேர்வு கட்டணம் & iii. ஆன்–லைன் சேவைக் கட்டணம் ) மற்றும் சேவை மையங்களிடம் பெறப்பட்ட Summary Reports ஆகியவற்றை உதவி இயக்குநர்கள் பாதுகாப்பில் வைத்துக் கொண்டு, அவற்றின் நகல்களை மட்டும் **11.9.2020–க்குள்** துணை இயக்குநர் (பொது) (பொறுப்பு) அவர்களின் பெயரிட்ட முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**இணைப்பு:**பட்டியல்கள்–2

ஒம்./–
**இயக்குநர்**

<u>நகல்</u>

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலகர்கள்.
3. கண்காணிப்பாளர்கள், எச்.3, எப்.3 மற்றும் அ4 பிரிவு (அலுவலகம்).

## பட்டியல்–1

### மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர்

| தனித்தேர்வர் வகை | விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர் | தேர்வுக் கட்டணம், இதர கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வினை முதன் முறையாக எழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் **(HSE First Year - Direct Private)** | ❖ பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்று ஓராண்டு இடைவெளி இருத்தல் வேண்டும்.(அதாவது மார்ச் 2020ல் தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள் எஸ்.எஸ்.எல்.சி அல்லது அதற்கு இணையான தேர்வில், ஜூன் 2019 அல்லது அதற்கு முந்தைய பருவங்களில் தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும்.) **பத்தாம் வகுப்பிற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மாவட்டக் கல்வி அலுவலர் வாயிலாக பெற்ற இணைச் சான்றிதழை (Equivalence Certificate) கண்டிப்பாக சமர்பிக்க வேண்டும். இணைச் சான்றிதழ் சமர்ப்பிக்காத தேர்வர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**<br>❖ 01.03.2020 அன்று 15 ½ வயது (15 வருடங்கள் 6 மாதங்கள்) நிறைவு செய்பவராக இருத்தல் வேண்டும். | தேர்வுக் கட்டணம் – 150/–<br>இதரக் கட்டணம் – 35/–<br>ஆன் லைன் பதிவுக் கட்டணம் – 50/–<br>மொத்தக் கட்டணம் – ரூ.235/– |
| ஏற்கனவே மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களில் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் **(HSE First Year - Arrear)** | ❖ பழைய பாடத்திட்டத்தில் / புதிய பாடத்திட்டத்தில் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள் தேர்ச்சி பெறாத பாடங்களில் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். | தேர்வுக் கட்டணம் (ஒவ்வொரு பாடத்திற்கும்) – ரூ. 50/–<br>இதரக் கட்டணம் – ரூ.35/–<br>ஆன்–லைன் மற்றும் பதிவுக் கட்டடணம் – ரூ.50/– |

**<u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர்</u>**

<table>
<tr><th>தனித்தேர்வர் வகை</th><th>விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர்</th><th>தேர்வுக் கட்டணம், இதர கட்டணங்கள் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணம்</th></tr>
<tr><td rowspan="2">மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களில் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் (HSE SECOND YEAR ARREAR)</td><td>❖ மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வினை ஏற்கனவே பழைய நடைமுறையில் எழுதி தேர்ச்சி பெறாத தனித்தேர்வர்கள் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.<br>(HSE SECOND YEAR ARREAR OLD PATTERN)</td><td rowspan="2">தேர்வுக் கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– இதரக் கட்டணம் ரூ.35/– மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/–<br><br>(உ–ம்)<br>ஒரு பாடம் ரூ.50 + 35 +50 = 135/–<br>இரு பாடங்கள் = 185<br>ரூ.100 + 35 + 50 = 185</td></tr>
<tr><td>❖ மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வினை புதிய நடைமுறையில் எழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள், தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுத விண்ணப்பிக்கலாம்.<br>(HSE SECOND YEAR ARREAR)</td></tr>
<tr><td rowspan="2">ஏற்கனவே நேரடித் தனித்தேர்வராக எழுதி தேர்ச்சிப் பெற்று / பெறாமல் மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வினை முதன் முறையாக எழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் (HSE SECOND YEAR)</td><td>❖ ஏற்கனவே மேல்நிலை முதலாமாண்டு தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்ற தேர்வர்கள் அனைவரும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.<br>(HSE SECOND YEAR)</td><td><u>HSE SECOND YEAR</u><br>தேர்வுக் கட்டணம் ரூ.150/–<br>இதரக் கட்டணம் ரூ.35/–<br>ஆன் லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/–<br>மொத்தக் கட்டணம் ரூ.235/–</td></tr>
<tr><td>❖ கடந்த ஆண்டு அல்லது அதற்கு முன்னர் முதன்முறையாக நேரடி தனித்தேர்வராக மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள், தற்போது மேல்நிலை முதலாமாண்டு தேர்ச்சி பெறாத பாடங்களை எழுத விண்ணப்பிக்கும்பொழுது, அத்துடன் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் அனைத்துப் பாடங்களையும் எழுதுவதற்கும் கண்டிப்பாக விண்ணப்பிக்க வேண்டும்.<br>(HSE FIRST YEAR ARREAR & SECOND YEAR)</td><td><u>HSE FIRST YEAR ARREAR</u><br>தேர்வுக் கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– இதரக் கட்டணம் ரூ.35/– மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/–<br><br>(உ–ம்)<br>ஒரு பாடம் ரூ.50 + 35 +50 = 135/–<br>இரு பாடங்கள் = 185<br>ரூ.100 + 35 + 50 = 185</td></tr>
</table>

## <u>பட்டியல்–2</u>

**<u>அரசுத் தேர்வுகள் சேவை மையத்திற்குச் (Govt.Examination Service Centre) சென்று விண்ணப்பிக்கும் தேர்வர்கள் விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்</u>**

| வ. எண் | **ஏற்கனவே +1 தேர்வெழுதி தோல்வியுற்றோர்** | | **முதன் முறையாக +1 தேர்வெழுதுவோர்** |
|---|---|---|---|
| 1. | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும் | 1. | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக்கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும். |
| 2. | அச்சிட்டு வழங்கப்பட்ட ஒருங்கிணைந்த (+1 மற்றும் +2) மதிப்பெண் பட்டியலின் (Statement of Marks) சான்றொப்பமிட்ட நகல் (Attested Copy)<br><br>**(மதிப்பெண் சான்றிதழ்களின் நகலில் தேர்வர் தாம் ஏற்கனவே +2 பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடம் அல்லது ஏதேனும் ஒரு அரசுப்பள்ளி தலைமையாசிரியரிடம் சான்றொப்பம் பெற வேண்டும்.)** / இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்யப்பட்ட ஏற்கனவே +1 தேர்வெழுதியதற்கான மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) / தேர்வுக் கூட நுழைவுச் சீட்டு (Hall Ticket) நகல். | 2. | பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் மதிப்பெண் சான்றிதழ்.<br><br>(அல்லது)<br><br>பத்தாம் வகுப்பிற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் சான்றிதழ் மற்றும் **அச்சான்றிதழ் பத்தாம் வகுப்பிற்கு இணையானததுதான் என்பதற்கான இணைச்சான்றிதழ் (Equivalence Certificate) ஆகியவற்றை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.** |
| 3. | ––– | 3. | பள்ளி மாற்றுச் சான்றிதழின் அசல் |
| 4. | ––– | 4. | இடப்பெயர்வு சான்றிதழ் அசல்<br>(வெளி மாநிலத் தேர்வர்கள் மட்டும்) |

| வ. எண் | **<u>ஏற்கனவே +2 தேர்வெழுதி தோல்வியுற்றோர்</u>** | வ எ | **<u>+1 தேர்வெழுதியபின் (600 மதிப்பெண்களுக்கு) முதன்முதலாக +2 தேர்வெழுதுவோர்</u>** |
|---|---|---|---|
| 1. | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும் | 1. | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக்கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும். |
| 2. | இதுவரை எழுதிய மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்களின் (Certificate of Marks) சான்றொப்பமிட்ட நகல் (Attested copy) / மதிப்பெண் பட்டியல்களின் (Statement of Marks) சான்றொப்பமிட்ட நகல் (Attested copy)<br><br>**(மதிப்பெண் சான்றிதழ்களின் நகலில் தேர்வர் தாம் ஏற்கனவே +2 பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடம் அல்லது ஏதேனும் ஒரு அரசுப்பள்ளி தலைமையாசிரியரிடம் சான்றொப்பம் பெற வேண்டும்.)** | 2. | இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகல் அல்லது தேர்வுக் கூட நுழைவுச் சீட்டு (Hall Ticket) நகல். |
| 3. | தேர்வெழுத தேவையான வருகைப் பதிவு உள்ளது என்பது தொடர்பாக பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்ற தகுதிச் சான்றிதழ் (பள்ளி மாணவராக தேர்வெழுத பதிவு செய்து தேர்வெழுதாதவர்களுக்கு மட்டும்). | 3. | ––– |
| 4. | செய்முறை மதிப்பெண்களுக்கான ஆவணம் (செய்முறை அடங்கிய பாடங்களைத் தேர்வெழுதுவோர் மட்டும்) | 4. | ––– |